பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
07 07 2025 **MONDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

__தலைப்புச் செய்திகள்__

1. அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் கூடிய உலகை கட்டமைப்பதில் இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.
2. சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு, பேரிடர் தடுப்பு கட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குறித்து பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றுகிறார்.
3. 2031ஆம் ஆண்டுக்குள் உயிரி பொருளாதாரத்தை 300 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
4. அமர்நாத் புனித யாத்திரை தொடங்கிய 5 நாட்களில் இதுவரை 70 ஆயிரம் பேர் பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.
5. ஈராக்கில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட மீத்தேன் வாயு வெளியேற்றம் காரணமாக துருக்கி ராணுவ வீரர்கள் 12 பேர் உயிரிழந்தனர்.

**<<<<<<<>>>>>>>**

அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் கூடிய உலகை கட்டமைப்பதில் இந்தியா முக்கிய பங்காற்ற வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

கேரள மாநிலம், கொச்சியில் சட்டக்கல்விக்கான தேசிய பல்கலைக் கழக மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர் இதனை தெரிவித்தார்.

நீதித்துறை, அரசியல் சாசனம் மற்றும் நிர்வாகத்துறை இவை மூன்றும் ஜனநாயகத்தின் தூண்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த தூண்களை சமமான முறையில் பராமரிக்க வேண்டியது அவசியம் என்றும், அவற்றுக்கு இடையே மோதல் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அனைவரின் கடமை என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

**<<<<<<<>>>>>>>**

பிரேஸலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று, ‘சுற்றுச்சூழல், **COP-30** என்ற பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா மாநாடு, உலகளாவிய சுகாதாரம்’ ஆகிய அமர்வு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் மக்களுக்கான நடவடிக்கைகள், சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு, பேரிடர் தடுப்பு கட்டமைப்பில் ஒருங்கிணைப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

மேலும், பருவநிலை மாற்றத்திற்கான நிதி குறித்த கூட்டுப் பிரகடனமும் இன்றைய கூட்டத்தில் வெளியிடப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<<>>>>>>>**

நடப்பாண்டில் அரசு மின்னணு சந்தை திட்டத்தின் மூலம், பாதுகாப்புத் துறைக்கு 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான தளவாடங்கள் உள்நாட்டிலேயே கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பாதுகாப்புத் துறை கணக்கு கட்டுப்பாட்டாளர் மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தளவாடங்கள் பயன்படுத்தப்பட்டதாக கூறினார்.

இந்த நடவடிக்கைக்குப் பிறகு, உலக அளவில் உள்நாட்டு பாதுகாப்பு தளவாடங்களின் தேவை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், பாதுகாப்புத்துறை மிகப் பெரும் மாற்றங்களை சந்தித்திருப்பதாகவும், சுயசார்பு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>>

2031ஆம் ஆண்டுக்குள் உயிரி பொருளாதாரத்தை 300 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக உயிரி உற்பத்தி தினத்தை ஒட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் உயிரி தொழில்நுட்ப சூழலியல் அமைப்பு விரைவான வளர்ச்சியை அடைந்திருப்பதாக கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 11 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் வெளியிடப்பட்ட உயிரி சுற்றுச்சூழல் கொள்கை பற்றி குறிப்பிட்ட அமைச்சர், உயிரி பொருளாதார இலக்கை நோக்கி நீடித்த வளர்ச்சியை இலக்காக கொண்டு, அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் சமநிலையை கருத்தில் கொண்டே எதிர்கால தொழிற்சாலைகளின் வளர்ச்சி மேம்பாடு அடையும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>>

நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் சமமான, குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவைகளை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, நாளிதழ் ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில், நாட்டின் முன்னேற்றம் என்பது அனைத்து தரப்பு மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் சுகாதார சேவைகள் கிடைப்பதை பொறுத்தே அமையும் என்று கூறினார்.

அந்த வகையில், இ-சஞ்சீவனி போன்ற திட்டங்கள் மக்களின் சுகாதாரத்தை உறுதி செய்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஐந்து கோடியே 46 லட்சம் குழந்தைகளுக்கும், ஒரு கோடியே 32 லட்சம் கர்ப்பிணி பெண்களுக்கும் இந்திரதனுஷ் திட்டத்தின் கீழ் தடுப்பூசி போடப்பட்டிருப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

<<<<<<<>>>>>>>>

சுரங்கத் துறையின் வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மத்திய அரசு பல்வேறு முக்கியமான சீர்திருத்தங்களை மேற்கொண்டிருப்பதாக நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் நிகழ்ச்சியில் பேசிய அவர், சுரங்கங்களை சுற்றி வாழும் மக்கள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில், அரசின் கொள்கைகள் அமைந்திருப்பதாக கூறினார்.

நாடுமுழுவதும் நீடித்த சுரங்க மேம்பாட்டை ஊக்குவிப்பதற்கு தொழில்நுட்பம் மிகவும் அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சுரங்கங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் திரு. கிஷன் ரெட்டி வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>>>

விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரங்கள், சரியானதா அல்லது நச்சுத்தன்மை கொண்டதா என்பதை அறிந்து கொள்ள அறிவியல்பூர்வ தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் 96வது ஆண்டு கூட்டத்தில் பேசிய அவர், வேளாண் துறையில் விவசாயிகளின் நலன், நீடித்த வளர்ச்சி, புதுமை கண்டுபிடிப்புகள் தொடர்புடைய பல்வேறு விஷயங்கள் குறித்து விரிவான ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

நாட்டை கட்டமைப்பதில் விவசாயிகளின் பங்களிப்பை பாராட்டிய திரு. சிவராஜ் சிங் சௌஹான், ஆராய்ச்சி என்பது ஆய்வகத்துடன் நின்றுவிடாமல், விவசாயிகளின் களத்திலிருந்து இறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

உலகின் மிகப் பெரிய உணவு தானிய உற்பத்தி மையமாக இந்தியா உருவாவதை யாராலும் தடுக்க முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>>

இந்த ஆண்டு அமர்நாத் புனித யாத்திரை தொடங்கிய 5 நாட்களில் இதுவரை 70 ஆயிரம் பேர் பனிலிங்கத்தை தரிசனம் செய்துள்ளனர்.

கடந்த 3ஆம் தேதி தொடங்கிய இந்த யாத்திரை, காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டம், பஹல்காம் முகாம் மற்றும் கண்டேர்பால் மாவட்டம், பால்டல் முகாம்களிலிருந்து இரண்டு வழித்தடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடர்ந்து இன்றும் ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் பனிலிங்கத்தை தரிசிப்பதற்காக சென்று கொண்டிருப்பதாகவும் சென்று கொண்டிருப்பதாகவும், பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் முழுவீச்சில் செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>>

அடுத்த ஆண்டு தொடங்கவுள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது, தகவல்களை பதிவு செய்வதற்கான பிரத்யேக இணையதளம் உருவாக்கப்படவுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கான தலைமைப் பதிவாளர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள கணக்கெடுப்பு குறித்த தகவல்கள் அனைத்தும் அந்த இணையதளத்தில் இடம்பெறும் என்று கூறினார்.

நாட்டிலேயே முதன்முறையாக டிஜிட்டல் முறையிலான கணக்கெடுப்பாக அமைவதுடன், செல்ஃபோன் செயலி மூலமாக தகவல்கள் திரட்டப்படும் என்று அவர் கூறினார்.

அதன்படி, ஆங்கிலம், ஹிந்தி மற்றும் மாநில மொழிகளில் அந்த தகவல்கள் இடம்பெற்றிருக்கும் என்றும், அதனை மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியில் உள்ள கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையிடுவார்கள் என்றும் தலைமைப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>>

மணிப்பூரில் இயல்பு நிலை படிப்படியாக திரும்புவதற்கான சூழல் உருவாகியிருப்பதாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அந்த அமைப்பின் நிர்வாகி திரு. **Sunil Ambekar,** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது மணிப்பூரில் இயல்பு நிலை உருவாகியுள்ளதாக கூறினார்.

அங்கு இருதரப்பினருக்கும் இடையே அமைதி மற்றும் பேச்சுவார்த்தைக்கான தொடக்கமாக இது அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>>

மணிப்பூரில் இயல்பு நிலை படிப்படியாக திரும்புவதற்கான சூழல் உருவாகியிருப்பதாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அந்த அமைப்பின் நிர்வாகி திரு. **Sunil Ambekar,** கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது மணிப்பூரில் இயல்பு நிலை உருவாகியுள்ளதாக கூறினார்.

அங்கு இருதரப்பினருக்கும் இடையே அமைதி மற்றும் பேச்சுவார்த்தைக்கான தொடக்கமாக இது அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>>

தைவான் நாட்டின் முக்கிய தீவில் வீசிய சூறாவளிக் காற்றில் சிக்கி 2 பேர் உயிரிழந்தனர். 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**Danas** என பெயரிடப்பட்டுள்ள இந்த சூறாவளிக் காற்று, சீன கடலின் வடக்கு பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாக வீசியதாகவும், தைவானின் தெற்குப் பகுதி பெருமளவு பாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>>

ஈராக்கில் குகை ஒன்றில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த போது துருக்கி ராணுவ வீரர்கள் 12 பேர் மீத்தேன் வாயு வெளியேற்றம் காரணமாக உயிரிழந்தனர்.

தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அவர்கள், மீத்தேன் வாயு கசிவால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்ததாக துருக்கி பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த வாயுக்கசிவால் பாதிக்கப்பட்ட 7 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

மஹாராஷ்ட்ராவின் மத்தியப் பகுதியிலும், விதர்பா பகுதியிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒரு சில இடங்களில் இடிமின்னலுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும், வடமேற்கு மாநிலங்களான ராஜஸ்தான், குஜராத், கோவா, ஒடிசா மாநிலங்களிலும், கடலோர கர்நாடகா பகுதியிலும் புழுதிக் காற்றுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் முதுநிலை விஞ்ஞானி திரு. **R.K. Jenamani** தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

அஸ்தானாவில் நடைபெற்ற உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் 11 பதக்கங்களை வென்ற இந்திய அணியினருக்கு மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<<<<END>>>>>>>>